சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.59/2023

01.04.2026

வா.சா.1 திருமதி. நித்யா, க/பெ. அமல்ராஜ்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது தகப்பனாருக்கு பூர்வீக ஊர் கிடாரங்கொண்டான் ஆகும். என் கணவரின் பூர்வீகம் குடவாசல் ஆகும். எனது கணவர் திருமணத்தின் போது சென்னையில் வேலை பார்த்துவந்தார். திருமணம் முடிந்தவுடன் நானும் எனது கணவரும் சென்னைக்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். திருமணம் ஆனதிலிருந்து நானும் எனது கணவரும் சென்னையில்தான் வசித்து வருகிறோம் என்றாலும் தாவா சொத்து உள்ள ஊருக்கு வருவதில்லை என்றாலும் சரியல்ல. அடிக்கடி வந்துசெல்வோம். பிரதிவாதி தாவா சொத்தை கிரய ஒப்பந்தம் செய்துக்கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சாட்சி மீண்டும் தன்னிச்சையாக அடமானம் வைத்ததாக கூறுகிறார். அடமானத்தின் அடிப்படையில் நடராஜன் வியாகுலசாமியிடம் சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைத்தார் என்றால் சரிதான். நடராஜன் அடமானம் வைத்ததாக சொல்வது சம்பந்தமாக நான் ஆவணம் வாங்கி பாரத்துள்ளேனா என்றால் இல்லை. நடராஜன் மற்றும் வியாகுலசாமிக்கு இடையே தாவா சொத்து குறித்து என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நடராஜன் வியாகுலசாமியிடமிருந்து சொத்தை அடமானம் எடுத்துக்கொண்டார் என்பதற்கு ஆவணம் கொடுத்தாரா என்றால் இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக 2023 ஆம் வருடம் மாதாகோவிலில் பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்தில் என் மாமனார் கலந்துக்கொண்டார் என்றால் சரிதான். அப்போது என் மாமனாரிடம் மிரட்டி எழுதிவாங்கியுள்ளார்கள். கிராம பஞ்சாயத்தார்கள் தான் என் மாமனாரை மிரட்டி எழுதிவாங்கினார்கள். எழுதி வாங்கியது சம்பந்தமாக என் மாமனார் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளாரா என்றால் தெரியவில்லை. எனக்கு விற்பனை செய்வதற்கு முன்பு நடராஜன் வியாகுலசாமிக்கு 24.04.2023 ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் எனக்கு தெரியாது. நான் கிரயம் பெறுவதற்கு முன்பே தாவா சொத்து நடராஜன் வசம் இல்லை என்றாலும் பிரதிவாதி வசம் தான் இருந்தது என்றாலும் சரியல்ல. நடராஜன் பிரதிவாதியிடம் கிரயம்

ஒப்பந்தம் செய்துக்கொண்டு கிரய தொகையை பெற்றுக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தை மறைத்து நடராஜன் எனக்கு எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்தம் செல்லத்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 1975 ஆம் வருடத்திலிருந்து பிரதிவாதி தான் தாவா சொத்தை சாகுபடி செய்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நடராஜன் சாகுபடி செய்தது சம்பந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற பின்னிட்டு தாவா சொத்தை சாகுபடிசெய்ததை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக பிரதிவாதி குடவாசல் வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து என் அனுபவத்தில் இல்லை என்பதால் தாவாபடி எனக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதி இன்றைய தேதிவரை அனுபவம் செய்துவருவதால் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து குத்தகைதாரர் ஆவார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் எப்போதும் அனுபவம் செய்யாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.